**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

P.W.–1

O.S.No. 110/2025

2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 07 ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி திரு.கே.ஆர். கண்ணன், பி.ஏ., பி.எல்., கூடுதல் சார்பு நீதிபதி, திருப்பூர் அவர்களால் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : திரு. ராகுல் பாண்டெய் | வயது: 43 |
| த/பெ. : திரு. கிருஷ்னகாந் பாண்டெய் | முகவரி: |
| தொழில் : | |

**முதல் விசாரணை :**

வாதி வங்கி மேலாளர் ஆஜர். பிரதிவாதிகள் தோன்றா தரப்பினராக உள்ளார்கள். வாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். தாவாவில் நான் வாதி வங்கியின் மேலாளர். சாட்சிக்கு தமிழ் மொழி தெரியாது. முதல் விசாரணை வாக்குமூலம் தமிழில் தயார் செய்யப்பட்டு என்னிடம் மொழி மாற்றம் செய்யப்பட்டு ஆங்கிலத்தில் தெரிவிக்கப்பட்டு சரியாக உள்ளது என்று தெரிந்து கொண்டபிறகு கையொப்பம் செய்துகொண்டேன். முதல் விசாரணைக்கான எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் உண்மையானவை. பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து அதில் உள்ள விபரங்களை தெரிந்து கொண்டு வழக்குரைஞர் முன்னிலையில் கையொப்பம் செய்தேன். அதை ஏற்றுக் கொண்டு நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை என் தரப்பில் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| | | |
|---|---|---|
| 04.11.2016 – பிரதிவாதிகள் வாதி வங்கிக்கு எழுதிக்கொடுத்த கடன் விண்ணப்பம் | அசல் | **வா.சா.ஆ 1** |
| 07.02.2017 – வாதி வங்கி ஏற்படுத்தி கடன் அனுமதி கடிதம் | அசல் | **வா.சா.ஆ 2** |
| 8.02.2017 – பிரதிவாதிகள் வாதி வங்கிக்கு எழுதிக்கொடுத்த கடனுறுதி சீட்டு | அசல் | **வா.சா.ஆ 3** |

| | | |
|---|---|---|
| 08.02.2017 – பிரதிவாதிகள் வாதி வங்கிக்கு எழுதிக்கொடுத்த ஒப்பந்தம் | அசல் | **வா.சா.ஆ 4** |
| 08.02.2017 – பிரதிவாதிகள் வாதி வங்கிக்கு எழுதிக்கொடுத்த assignment letter | | **வா.சா.ஆ 5** |
| 08.02.2017 – கடனை ஒப்புக்கொண்டு பிரதிவாதிகள் வாதி வங்கிக்கு எழுதிக்கொடுத்த ஒப்புதல் கடிதம் | | **வா.சா.ஆ 6** |
| 10.03.2025 – 1.1.2017 முதல் 09.03.2025 வரை உள்ள முதல் பிரதிவாதியின் வங்கி கணக்கு பரிமாற்ற விவரங்கள் | கணினி நகல் | **வா.சா.ஆ 7** |

ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆகவே எனது தரப்பு சான்று ஆவணங்களை ஏற்று வழக்குப்படி உத்தரவு ஆக வேண்டுகிறேன்.

மேலே சொன்ன விவரங்கள் எனக்கு மொழி மாற்றம் செய்யப்பட்டு ஆங்கிலத்தில் சொல்லப்பட்டு சரியாக உள்ளது என்று தெரிந்து கொண்டபிறகு கையொப்பம் செய்தேன்.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

S/d. கே.ஆர்.கண்ணன்
கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.